# அமெரிக்காவில் உள்ள முன்னணி நிபுணர்களுடன் பிரதமரின் உரையாடல்

ஜூன் 24, 2023

ஜூன் 23, 2023 அன்று வாஷிங்டன் டி.சி.யில் உள்ள ஜான் எஃப். கென்னடி மையத்தில் அமெரிக்காவில் உள்ள தொழில் வல்லுநர்கள் கூட்டத்தில் பிரதமர் திரு நரேந்திர மோடி உரையாற்றினார்.

2. இந்த நிகழ்வை US - இந்தியா வியூகக் கூட்டாண்மை மன்றம் (USISPF) ஏற்பாடு செய்தது. அமெரிக்க வெளியுறவுத்துறை செயலாளர் திரு. ஆண்டனி பிளிங்கன் அவர்களும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தார்.

3. பிரதமர் தனது உரையில், இந்தியாவில் தற்போது ஏற்பட்டுள்ள ஆழமான மாற்றம் மற்றும் பல்வேறு துறைகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்றங்களை எடுத்துரைத்தார். "இதுவே தருணம்" என்று வலியுறுத்திய பிரதமர், இந்தியாவுடன் கூட்டுறவை உருவாக்க நிபுணர்களுக்கு அழைப்பு விடுத்தார்.

4. பல்வேறு துறைகளைச் சேர்ந்த சுமார் 1000 முன்னணி தொழில் வல்லுநர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

**வாஷிங்டன் டிசி.**
**ஜூன் 23, 2023**